




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 09.02.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்







# தேசிய நிகழ்வுகள்

- புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை சார்பில், தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை இணைந்து **தைத்திருவிழா தாவரவியல் பூங்காவில்** நேற்று முன்தினம் துவங்கியது.
  - விழாவை **முதல்வர் நாராயணசாமி துவக்கி வைத்தார்.** இரண்டாவது நாளாக நேற்று மலர் கண்காட்சி நடந்தது. கண்காட்சியில், 25 ஆயிரம் செடிகள், மலர்கள் மற்றும் காய்கறி வகைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

- **சேலம் மாவட்டம் வாழப்பாடியில் 16 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச தரத்தில் புதிய கிரிக்கெட் மைதானத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி** பிப்ரவரி 09 அன்று **திறந்து வைத்தார்.**
  - இந்த புதிய கிரிக்கெட் மைதானம் திறப்பு விழா நிகழ்ச்சியில் முன்னாள் கேப்டனும், தேசிய கிரிக்கெட் அகாதெமி இயக்குநருமான ராகுல் டிராவிட், முன்னாள் பிசிசிஐ தலைவர் என்.ஸ்ரீனிவாசன், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவர் ரூபா குருநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

- **யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரிய நகரமாக புதுச்சேரியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக யுனெஸ்கோ இயக்குநர் எரிக் ஃபால்ட் தெரிவித்தார்.**

- புதுவை அரசின் நகரம் - கிராம திட்டமிடல் துறையும், கலை, கலாசார பாரம்பரியத்துக்கான இந்திய தேசிய அறக்கட்டளையும் இணைந்து ”புதுச்சேரி பாரம்பரிய பாதுகாப்பு - யுனெஸ்கோ நியமனத்துக்கான பாதை“ என்ற தலைப்பிலான கருத்தரங்கை புதுச்சேரியில் பிப்ரவரி 08 அன்று நடத்தியது.
- புதுவை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் அரசு செயலர் மகேஷ் வரவேற்றார். தலைமைச் செயலர் அஸ்வனி குமார் கருத்தரங்கைத் தொடக்கி வைத்தார். இதில், சிறப்பு விருந்தினராக யுனெஸ்கோ இயக்குநர் எரிக் ஃபால்ட் கலந்து கொண்டு, **"உலகப் பாரம்பரிய நகர நியமனத்துக்கான வழிமுறைகள்"** என்ற தலைப்பில் உரையாற்றினார்.
- **செய்தி துளிகள் :**
  - இந்தியாவில் 38 இடங்கள் யுனேஸ்கோவால் பாரம்பரிய நகரங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன..

- **லக்னோவில் 11-ஆவது ராணுவ தளவாடங்கள் மற்றும் பாதுகாப்புத் துறை கண்காட்சி கடந்த 5-ஆம் தேதி தொடங்கியது.** இந்தியாவின் ராணுவ தளவாட உற்பத்தித் திறனை உலகுக்கு பறைசாற்றும் நோக்கில் நடைபெறும் இக்கண்காட்சியில், பாதுகாப்புத் துறை சார்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பாதுகாப்புத் தளவாடங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



We Shine Academy™

- இந்நிலையில், இக்கண்காட்சியை பார்வையிட பொதுமக்களுக்கு பிப்ரவரி 08 அன்று அனுமதி வழங்கப்பட்டது. இதையடுத்து, ஏராளமானோர் கண்காட்சியை பார்வையிட திரண்டனர். ராணுவ தளவாடங்கள் அருகே நின்று, கைப்படம் எடுத்துக் கொண்டனர்.
- **செய்தி துளிகள் :**
    - லக்னோ தலைநகர் இந்திய மாநிலமான உத்தரப் பிரதேசம்

## விளையாட்டு நிகழ்வுகள்

- **தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் எஸ்எஸ்.ராஜன் கோப்பை மாவட்டங்களுக்கு இடையிலான டி20 போட்டியில் கோயம்புத்தூர் சாம்பியன் பட்டம்** வென்றது.
    - சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பிப்ரவரி 08 அன்று மதுரை-கோவை மாவட்ட அணிகளுக்கு இடையே இறுதி ஆட்டம் நடைபெற்றது.
    - வெற்றி பெற்ற அணிக்கு சாம்பியன் கோப்பையை டிஎன்சிஏ துணைத் தலைவர் டாக்டர் பி.அசோக் சிகாமணி வழங்கிப் பாராட்டினார்.
    - **செய்தி துளிகள் :**
        - சேப்பாக்கம் துடுப்பாட்ட அரங்கம் (எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் அரங்கம்) 1916 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
        - இதற்கு இந்தியத் துடுப்பாட்டக் கட்டுப்பாடு வாரியத்தின்

முன்னாள் முதல்வர் எம்.ஏ. சிதம்பரம் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

- சுமார் 50,000 பேர் அமரக்கூடிய இந்த அரங்கில் 1934 ஆம் ஆண்டு முதல் தேர்வுப் போட்டி நடை பெற்றது.

## திருக்குறள்

**குறள் எண் : 103**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : செய்ந்நன்றி அறிதல்

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது.**

**விளக்கம் :** இன்னபயன் கிடைக்கும் என்று கருதாது ஒருவர் செய்த நன்மையின் பெருமையை ஆராய்ந்தால், அது கடலைவிடப் பெரியதாகும்.

We Shine Academy ™